1973 மார்ச் 30] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இந்தச் சட்டமுன்வடிவின் நோக்கத்தை ஆதரிக்கும் வகையிலே முழு மனதோடு ஏற்றுக் கொள்ளும் வகையில் ஆதரவு தந்தமைக்காக நன்றி தெரிவித்து சட்டமுன்வடிவை நிறை வேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1973-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/73) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச்சட்ட முன்வடிவைச் சட்டமாக்கித் தரவேண்டுமென்று கோருகிறேன்.

(உ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டமுன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(உ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்ட முன்வடிவு

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு 1972-ம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/72)-ஐ பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.